மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 35 / 2020**

பி.வ ா.சா.1 - சுலைமான் 19.03.2025

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-

நான் கூட்டுக்குடும்பமாக இருந்த போது விவசாய வேலைகள் செய்து வந்தேன். எனது அண்ணன் முகமது இப்ராஹிம் மில்லில் வேலை பார்த்தார். நான் தற்பொழுது குடியிருந்து வரும் வீட்டை நானும் எனது அண்ணனும் சேர்ந்து கட்டினோம். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் எனது அண்ணன் மில்லில் வேலை பார்த்ததால் அவரது சொந்த வருமானத்தில் பூர்வீக இடத்தில் அந்த வீட்டை கட்டினார் என்றால் சரியல்ல. என் மீது இருந்த பாசத்தில் அந்த இடம் பூர்வீக இடம் என்பதால் எனது அப்பா உயிருடன் இருந்த காலத்தில் அந்த வீட்டில் சரி பாதியை எனக்கு பிரித்துக் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. என்னுடன் பிறந்த சகோதரிகள் இரண்டு பேர். எனது சகோதரிகளுக்கு எனது தகப்பனார் திருமணம் செய்து வைத்தார். எனது தகப்பனார் விவசாய வேலை தான் செய்து வந்தார். எனது சகோதரர் முகமது இப்ராஹிம் மில்லில் வேலை பார்த்து பெற்ற வருமானத்தில் தான் எனது சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. 14.10.1981ம் தேதி ஒரு பாக விஸ்தி பத்திரம் எழுதி உள்ளோம். அது பதியப்பட்டதா என்று ஞாபகம் இல்லை. எனது அண்ணன் முகமது இப்ராகிமின் சுய சம்பாத்திய சொத்தையும் சேர்த்து மேற்படி பாக விஸ்தி பத்திரம் எழுதப்பட்டதால் அந்த பத்திரத்தை எனது அண்ணன் முகமது இப்ராஹிம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால்

சரியல்ல. சுமார் 5 6 வருடங்களுக்கு முன்பு தேசிய நெடுஞ்சாலை நான்குவழிப்பாதையாக மாற்றுவதற்கு நில ஆர்ஜீதம் செய்யப்பட்ட போது சொத்து சம்மந்தமாக ஜமாத்தில் பேசினோம். 3 ம் பிரதிவாதி பியாராரசூலுக்கு நான் தாவா 2 வது லக்க சொத்தான 4 செண்டு சொத்தை எழுதி கொடுத்துள்ளேன். அந்த 4 செண்டு சொத்து அதற்கு முன்பு எனது பெயரில் தான் இருந்தது. தாவா 2 ம் லக்க சொத்தான அந்த 4 செண்டு சொத்து பூர்வீக சொத்து எனது அப்பா ஜமால் பெயரில் இருந்தது என்றால் சரிதான். எனது மகன் பக்ரூதீனுக்கு தாவா 1 ம் லக்க சொத்தை நான் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தாவா 1 ம் லக்க சொத்து எனது தந்தை ஜமால் பெயரில் இருந்தது என்றால் சரிதான். தாவா 1, 2 லக்க சொத்துக்களை எப்போது எனது பெயருக்கு பத்திரம் போட்டேன் என்றால் எனது அப்பா இருந்த போது பிரித்து என் பெயருக்கு மாற்றிக்கொடுத்தார். எனது அண்ணன் முகமது இப்ராஹிம் இறந்த பின்பு தாவா 1, 2 லக்க சொத்துக்களுக்கு என் பெயரில் ஆவணங்களை 2019 ல் மாற்றி நான் அதை பொறுத்து 2, 3 ஆவணங்கள் ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் ஜமாத்தில் பாக விஸ்தி பத்திரம் நகலை வாங்கி மோசடியாக என் பெயருக்கு பட்டா மாற்றி ஆவணங்களை ஏற்படுத்திக்கொடுத்தேன் என்றால் சரியல்ல எனது அண்ணன் உயிருடன் இருந்த போதே என் பெயருக்கு பட்டா மாறிவிட்டது. நான் எனது அண்ணன் இறந்த பின்பு ஜமாத்தில் சொல்லி வாதிகளிடம் பாகவிஸ்தி நகலை பெற்று அதன்பிறகு தாவா சொத்துக்களுக்கு பட்டா என் பெயரில் மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது அண்ணன் உயிருடன் இருந்த போதே எனது பெயருக்கு வருவாய் துறை ஆவணங்கள் மாறியதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள புல எண் 166/6 பி. ராவுத்தர் செய் நிலம் என் அண்ணன் சுய சம்பாத்தியத்தில் வாங்கிய சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது எதிர்வழக்குரையிலும் நிரூபண வா்ககுமூலத்திலும் சொல்லியுள்ளது போல எனது அப்பா உயிருடன் இருந்த போது பாகவிஸ்தி ஏதும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது சகோதரிகளுக்கு எனது அப்பா திருமணம் செய்து வைத்து செய்ய வேண்டியதை செய்து விட்டதால் அவர்கள் பாகத்தை அவர்கள் விடுதலை செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எனது அண்ணன் உயுருடன் இருக்கும்வரை பிரிக்கப்படாமல் தான் இருந்தது என்றால் சரியல்ல பிரிக்கப்படாத சொத்துக்களை பொறுத்து நான் ஏற்படுத்தியுள்ள ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் தாவா 1, 2 லக்க சொத்துக்களில் எனது அண்ணன் முகமது இப்ராஹிமின் வாரிசுகளான வாதிகளுக்கு 2 ல் 1 பாகம் கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதை மறைத்து வருவாய் துறை ஆவணங்களை மோசடியாக உற்பத்தி செய்து 2, 3 பிரதிவாதிகளுக்கு நான் ஏற்படுத்திக்கொடுத்துள்ள ஆவணங்கள் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் 259/11 ல் உள்ள வீட்டில் எனக்கு பாதியை பிரித்து கொடுத்ததால் தேசிய நெடுஞ்சாலைக்காக நில ஆர்ஜீதம் செய்த சொத்தை நான் எனது அண்ணனுக்கு விட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான் ஆனால் அதற்கு எனக்கு தாவா 1 வது லக்க சொத்து 48 செண்டு

சொத்தை கொடுத்தார்கள். எனக்கு 48 செண்டு கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை